# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109761

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2022** FIR No.: மு.த.அ. எண் **06/2022** Date: நாள் **16.08.2022**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7(a)**
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **16.08.2022** Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் சுமார் 10.30 மணிக்கு Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **16.08.2022** Time : நேரம் **16.00 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **16.08.2022** Time : நேரம் **16.45 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **50 Kms North West**
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம் கே.சிதம்பராபுரம், கயத்தார் தாலுகா.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **R.**ராகவன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரெங்கசாமிநாயக்கர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி 4/268, தெற்கு தெரு, கே.சிதம்பராபுரம், கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு.வெங்கடேஸ், கிராம நிர்வாக அலுவலர், கே.சிதம்பராபுரம், கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் / தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ---

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

M.SUDHA Inspector of Police

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Rahman 16.8.2022

M Sudha 16.08.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

M. SUDHA

Name: பெயர் ...........................................

Rank: நிலை Inspector of Police ........

Vigilance and Anti Corruption
Thoothukudi District
Thoothukudi.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

**16.08.2022 at 17.45 hrs**

**Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.06/2022**

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 16.08.2022-ம் தேதி மதியம் 15.30 மணிக்கு M.சுதா, தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திரு.R.ராகவன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் கயத்தார் தாலுகா, கே.சிதம்பராபுரம் கிராம சர்வே எண்.343/1-ல் ஒரு பகுதியான 3 ஏக்கர் 25 செண்ட் நிலத்தை திருநெல்வேலி சிவந்தி நகரில் வசித்து வரும் சுப்பையா கொம்பன் மகன் சேகர் என்பவரிடமிருந்து கிரையமாக பெற்றுள்ளதாகவும். தற்போது அது பட்டா எண்.1631-ன்படி கூட்டு பட்டாவாக உள்ளதாகவும், மேற்படி இடம் கூட்டுப்பட்டாவாக இருப்பதனால் அதனை தனிப்பட்டாவாக ஆக்குவதற்கு கே.சிதம்பராபுரம் கிராம நிர்வாக அலுவலர் திரு.வெங்கடேஸ் அவர்களை அணுகியபோது தனிப்பட்டாவிற்கு பரிந்துரை செய்வதற்கு ரூ.14,000/- (ரூபாய் பதினான்காயிரம்) லஞ்சமாக கேட்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கயத்தார் தாலுகா, கே.சிதம்பராபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.வெங்கடேஸ் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்தும் அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 06/2022 பிரிவு 7 (a) of PC Act, 1988 as Amended in 2018 படி 16.08.2022-ம் தேதி மாலை 16.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் R.ராகவன், வ 58, S/o ரெங்கசாமி நாயக்கர், 4/268 தெற்குதெரு, கே.சிதம்பராபுரம், கயத்தார் தாலுகா. பெருனர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, தூத்துக்குடி. அய்யா, நான் கே.சிதம்பராபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன், எனக்கு கே.சிதம்பராபுரத்தில் விவசாய நிலங்கள் உள்ளது. நான் கடந்த 22.4.2022 ம் தேதி கடம்பூர் சார்பதிவாளர் அலுவலக ஆவன எண்

794/2022 ன்படி பெங்களூர் m/s SPML INFRA Limited என்ற நிருவனத்திற்காக பவர் எஜெண்ட் நிலையில் இருந்து வரும் திருநெல்வேலி சிவந்தி நகரில் வசித்து வரும் சுப்பையா கெம்பன் மகன் சேகர் என்பவரிடமிருந்து கே.சிதம்பராபுரம் மாலில் சர்வே எண் 343/1 ல் ஒருபகுதியான 3 ஏக்கர் செண்டு 25, புஞ்சை நிலத்தை ரூ.3,25,000க்கு கிரையம் வாங்கினேன். நான் ஒரு பகுதியை மட்டும் வாங்கியதால் மேற்படி இடம் பட்டா என். 1631ன் படி எனது பெயரிலும் பெங்களூர் சுபாஸ் புரஜெக்ட்ஸ் அன்ட் மார்க்கெட்டிங் லிமிடெட் ஆகிய இரு பெயர்களிலும் கூட்டு பட்டாவாக இருந்து வருகிறது. எனவே அதை தனிப்பட்டாவாக நான் வாங்கிய இடத்துக்கு மட்டும் என் பெயரில் பிரித்து கேட்டு கடந்த 8.8.2022ம் தேதி ஆன்லைன்னில் வின்னப்பித்தேன். அது கே.சிதம்பராபுரம் V.A.O-விடம் நிலுவையில் இருந்ததால் நான் கே.சிதம்பராபுரம் V.A.O அலுவலகத்துக்கு சென்று அங்கு இருந்த கே.சிதம்பராபுரம் V.A.O வெங்கடேஸ் அவர்களை சந்தித்து எனது மனு தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் எனது பெயரில் தனிபட்டா வழங்க ரூ.15,000 செலவு ஆகும் பணத்தேடு வாருங்கள் பார்ப்போம் என்று என்னை அனுப்பிவிட்டார். பின்பு இன்று 16.8.2022ம் தேதி காலை 10.30 மனியளவில் கே.சிதம்பராபுரம் V.A.O அலுவலகத்திற்கு சென்று V.A.O வெங்கடேஸ் அவர்களை மீண்டும் பார்த்தேன். அவர் என்னிடம் பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என்றேன். அதற்கு அவர் ரூபாய் 1,000 குறைத்து ரூபாய் 14,000 நாளை காலை கொண்டு வாங்க அப்பெழுதுதான் உங்கள் மனு மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறிவிட்டார். நானும் வேரு வழியின்றி அவரிடம் சரி என்று செல்லி விட்டு வந்து விட்டேன். வீட்டுக்கு வந்து யோசித்து பார்த்ததில் எனக்கு பணம் லஞ்சமாக கொடுக்க மனம் இல்லை. எனவே, இந்த புகர் மனுவை எழிதி கென்டும் என் வீட்டில் விவசாய செலவுக்காக வைத்திருந்த பணத்தில் ரூ.14,000 த்தையும் எடுத்து கென்டும் வீட்டில் இருந்து இங்கு வந்தேன், என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட கே.சிதம்பராபுரம் VAO வெங்கடேஸ் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கெள்கிறேன். இதற்கு முழு ஒத்துழைப்பும் நான் தருவேன் என்று உருதி கூறிகிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by R.Rahavan, நாள் 16.8.2022. Respected Sir, இன்று 16.08.2022-ம் தேதி மாலை 16.00 மணிக்கு, (P.T.O) இம்மனுவை பெற்று, மனுதாரர், எதிர்மனுதாரர் பற்றி இரகசிய விசாரணை செய்தும், கனம் இயக்குநரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அலுவலகத்தில் அலைபேசியில் தகவல் தெரிவித்தும், அனுமதி

பெற்றும் இம்மனுவின் தன்மைக்கேற்ப 16.08.2022-ம் தேதி மாலை 16.45 மணிக்கு தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 06/2022 பிரிவு 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 Act படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். xxxxxx s/d., by M.Sudha, 16.08.2022 Inspector of Police, V&AC, Thoothukudi. அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

M Sudha
16.08.2022
Inspector of Police,
Vigilance & Anti Corruption,
Thoothukudi.